முருகப்பெருமான் துணை

**மகான் நந்தீஸ்வரர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.12.2022, செவ்வாய்கிழமை

1. ஞானமுடன் தானதரும பலமும்
   நன்னெறியாக அருளி வருகின்ற
   ஞானபண்டிதனின் அவதார சொரூபமே
   ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் சுபகிருது தேள்திங்கள்
   வரங்களென இருபானேழ்திகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 27 ம் நாள் 13.12.2022, செவ்வாய்கிழமை)
   வழங்குவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை நந்தீஸ்வரர் யானும்
   அருளுவேன் உலகநலம் பெற
   பேசிட அன்னதான பலமாக
   பேருலகினில் தருமம் வளர்த்து
4. வளர்த்து வையகம் தன்னை
   வளமாக்கும் மகா சக்தியாக
   தளர்வின்றி அருளும் அரங்கனே
   தரணியின் சிறந்த ஞானி
5. ஞானியரின் அவதாரம் தன்னை
   நாட்டிடுவேன் அடையாளம் உலகோர்
   இனியாகினும் கண்டடைந்து வர
   இவ்வுலகம் சகல இன்னலை வென்று
6. வென்று வளர்ச்சிநிலை காணும்
   வினவிட நீதி நெறிகுன்றா
   நன்றான ஆளுமைகளாகி
   நாடெங்கும் ஞானத் தலைமை
7. தலைமைகள் பெருகி நன்கு
   தரணி பாதுகாப்பு அடையும்
   தலைமை ஞான வழியாகிட
   தரணி எந்தவித அழிவுமின்றி
8. அழிவுமின்றி இயற்கை ஆசிபட
   அனுகிடும் கழனி கிருஷியென
   தொழில் வளர்ச்சிக்கானதொரு
   தெய்வ அனுகூலமாக மாறி
9. மாறியே எல்லா வகையிலும்
   மாற்றமும் தேற்றமும் கூடி
   தெரியவரும் அமைதி மகிழ்வும்
   தெய்வநெறி காக்கும் வளர்க்கும்

10. வளர்க்கும் சக்திகளாகத் தேறி
வல்லமை ஞானிகள் போல
தளர்வின்றி மக்களுக்குப் பெருகும்
தரணியே தனித்துவம் காணும்

11. காணவே ஞான ஆட்சியாக
கலியுகம் கண்டுத் தேறும்
ஞானதேசிகன் அனுகூலத்தாலே
நாட்டிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–